நீதிமன்றப் படிவ எண்.53
(விதி 42–ஐ காண்க)
சாட்சியின் சான்றுரை
(கு.வி.மு.ச. அத்தியாயம் XXIII)
மகிளா நீதிமன்றம் , கடலூர்
அமர்வு வழக்கு எண்.201 /2021

அரசு தரப்புக்காக அ. சா.5 சாட்சியின் சான்றுரைகள்

| | | | |
|---|---|---|---|
| பெயர் | டாக்டர்.கார்த்திகேயன் | தொழில்/ பதவி | |
| கணவர்/தந்தை பெயர் | | வயது | |
| கிராமம் | | வட்டம் | |
| சாட்சிப்பட்டியலில் வரிசை எண் : L.W. 13 | | | |

எதிரி ஆஜரில் இருந்தார்.

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 on 01st day of August 2025.

**முதல் விசாரணை**– (ஆரம்பிக்கப்பட்ட நேரம் 11.22 )

நான் தற்போது கோயம்புத்தூர் மாவட்ட சுகாதார அலுவலகத்தில் மாவட்ட தொற்றுநோய் அலுவலராக பணிபுரிந்து வருகிறேன். 2019 ஆம் வருடம் பரங்கிப்பேட்டை அரசு மருத்துவமனையில் உதவி மருத்துவராக பணிபுரிந்தபோது 04.11.2019 ஆம் தேதி காலை 10.45 மணிக்கு பரங்கிப்பேட்டை காவல்நிலைய பெண் தலைமைக் காவலர் 1560 திருமதி.சிவசங்கரி என்பவர் பரங்கிப்பேட்டை காவல்ஆய்வாளர் அவர்களின் வேண்டுகோள் கடிதத்தில் காவல்நிலைய குற்ற எண்.160/2019 சட்டப்பிரிவு 174(3) Cr.P.C வழக்கில் இறந்துபோன சத்யா வயது–20

த.பெ.ரமேஷ் என்பவரின் பிரேதத்தை பிரேத விசாரணை செய்து சான்று வழங்குமாறு வேண்டியதைபெற்று மருத்துவமனை சவக்கிடங்கில் வைக்கப்பட்டிருந்த சத்யா என்பவரின் பிரேதத்தை மேற்படி பெண் தலைமைக் காவலர் அடையாளம் காட்டி ஆஜர் படுத்தியதை பகல் 01.00 மணிக்கு பிரேத பரிசோதனை செய்தேன். இறந்துபோன சத்யா என்பவருக்கு உடலில் உள்ள விவரங்களை பிரேத பரிசோதனை அறிக்கையில் விரிவாக குறிப்பிட்டுள்ளேன். (*தமிழில் சாட்சி அளிக்க அவகாசம் கேட்டதால் ஒத்திவைக்கப்படுகிறது).*
(முடிக்கப்பட்ட நேரம் 11.29)

(**ஆரம்பிக்கப்பட்ட நேரம்** 12.15 )

பிரேதமானது மிதமான உடலமைப்பு கொண்ட பிரேதம் ஆகும். முதுகில் படுத்த நிலையில் கண்கள் மூடிய நிலையிலும் மூக்கு, கண், வாய் காதுகளில் எந்த வித வெளியேற்றம் இல்லாத நிலையிலும் கைகள் உடலின் பக்கங்களில் காணப்பட்ட நிலையில் இருந்தது.

**<u>வெளிப்புற காயங்கள்</u>**

1. கழுத்தில் ligature mark எனப்படும் இணைப்பு அடையாளம் 7 இன்ச் x 1 இன்ச் அளவில் வலது காது பின்புறத்தில் இருந்து இடது கழுத்து பின்புறம் வரை காணப்பட்டது.
2. பிரேதம் பின்புறத்தில் ரத்தம் தேங்கிய நிலையில் காணப்பட்டது.
3. வேறு வெளிப்புற காயங்கள் எதுவும் இல்லை.
4. ஆசன வாய் பகுதியில் மனித கழிவுகள் காணப்பட்டது.
5. பிறப்பு உறுப்பு பகுதியில் எந்த வெளியேற்றமும் இல்லை.

**<u>உள்உறுப்பு ஆய்வு</u>**

1 and 2 நெஞ்சு பகுதியில் எந்த எலும்பு முறிவும் இல்லை.

3. இருதய அறையில் 200 மில்லி ரத்தம் இருந்தது. வேறு பாதிப்பு இல்லை.

4. நுரையீரல் பகுதியில் எந்த பாதிப்பும் இல்லை.

5. Hyoid bone எலும்பில் எந்த எலும்பு முறிவும் இல்லை.

6. வயிற்றுப்பகுதியில் வாயு மற்றும் 150 கிராம் அளவில் உணவு பொருட்கள் இருந்தன.

7, 8 and 9 கல்லீரல், மண்ணீரல், சிறுநீரகம் ஆகிய உறுப்புகளில் எந்த பாதிப்பும் இல்லை.

10. குடல் பகுதியில் வாயு மற்றும் மனித கழிவுகள் இருந்தன.

11, 12 and 13 தலை பகுதியில் மண்டை ஓடு, ஜவ்வு மற்றும் மூளை பகுதியில் எந்த பாதிப்பும் இல்லை.

மேலும் உள் உறுப்புகள் மற்றும் இணைப்பு, Hyoid bone, ligature mark–ன் தோல்பகுதிகள் ரசாயன பகுப்பாய்விற்காக சேகரம் செய்யப்பட்டு மருத்துவ கல்லூரி மருத்துவமனைக்கு பரிசோதனைக்கு அனுப்பப்பட்டது. பிரேத பரிசோதனை மதியம் 01.00 மணியில் இருந்து 02.0 மணி வரை நடைபெற்றது. உள் உறுப்பு பரிசோதனை பெற்று உள் உறுப்பு அறிக்கையில் எந்த வித மதுவோ விஷமோ கண்டறியப்படவில்லை. Hyoid bone–ல் எந்தவித எலும்பு முறிவும் கண்டறியப்படவில்லை. எனவே, மரணத்திற்கான காரணம் தூக்கிட்டுக்கொண்டதால் மூச்சு திணறல் ஏற்பட்டு இறந்திருக்கலாம் என்று எனது இறுதி கருத்துரையை வழங்கினேன். (நான் வழங்கிய பிரேத பரிசோதனை அறிக்கை **அ.த.சா.ஆ.3** ஆக குறியீடு செய்யப்படுகிறது). விழுப்புரம் மருத்துவ கல்லூரி மருத்துவமனையில் இருந்து எங்கள் மருத்துவமனைக்கு பெறப்பட்ட Hyoid bone மற்றும் Viscera Report –ஐ பார்த்து நான் பிரேத பரிசோதனை அறிக்கையை வழங்கினேன். இந்த வழக்கு சம்மந்தமாக போலிசார் என்னை விசாரித்தார்கள்.

**<u>எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை</u>**

வழக்கறிஞர் ஆஜரில் இருந்தார். குறுக்கு விசாரணை இல்லை என தெரிவித்தார்.

**மறு விசாரணை** இல்லை

(முடிக்கப்பட்ட நேரம் 12.28)

2025 ஆம் ஆண்டு ஆகஸ்ட் திங்கள் 01 ஆம் நாளன்று, 1969–ஆம் ஆண்டு உறுதி மொழி சட்டம் (மையச் சட்டம் 44/1969)–இன் வகைமுறைகளுக்குட்பட்டு உளமார உறுதியளிக்கிறேன்.

சாட்சியின் கையொப்பம்

*" என்னால்/என் முன்பாக திறந்தவெளி நீதிமன்றத்தில் பதியப்பட்டு, சாட்சிக்கு பொருள் விளக்கப்பட்டு/ படித்து காண்பிக்கப்பட்டு, அது சரி என வாக்குமூலதாரரால் ஒப்புக்கொள்ளப்பட்டது."*

(Sd/–G.Kulasekaran)
அமர்வு நீதிபதி,
மகிளா நீதிமன்றம்,
கடலூர்.